# இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான மூன்றாவது மீளாய்வு தொடர்பிலான அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதியம் எட்டியுள்ளது

நாடொன்றிற்கு விஜயம் செய்ததன் பின்னரான பூர்வாங்க கண்டறிகைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் குழுக்களின் அறிக்கைகளை விஜயத்தின் நிறைவில் மேற்கொள்ளப்படுகின்ற ஊடக அறிக்கைகள் உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களாவதுடன் அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இப்பணிக்குழுவின் பூர்வாங்க கண்டறிகைகளின் அடிப்படையில், அலுவலர்கள் அறிக்கையொன்றினைத் தயாரிப்பதுடன் முகாமைத்துவத்தின் ஒப்புதலிற்கு உட்பட்டு இது கலந்துரையாடலினையும் தீர்மானத்தினையும் மேற்கொள்ளும் பொருட்டு பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டதின் மூன்றாவது மீளாய்வினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். மீளாய்வானது பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டு, பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் நிறைவுசெய்யப்பட்டவுடன் நிதியிடலில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 333 மில்லியன் தொகைக்கான அணுகலினை இலங்கை கொண்டிருக்கும்.

- நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களிற்கான புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பானது நம்பிக்கையினை மேம்படுத்தியுள்ளதுடன் கொள்கைத் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்துகின்றது. மறுசீரமைப்பு உத்வேகத்தினை நிலைபெறச்செய்தலானது இதுவரையான காலப்பகுதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடின உழைப்பினால் வென்றெடுக்கப்பட்டவற்றினைப் பாதுகாப்பதற்கும் நீடித்துநிலைத்திருக்கக்கூடிய மீட்சி மற்றும் உறுதியான மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய வளர்ச்சி என்பவற்றினை நோக்கிய பாதையில் பொருளாதாரத்தினை இடம்பெறச்செய்வதற்கும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

- பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையானது (i) முன்கூட்டிய நடவடிக்கைகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தல் மற்றும் (ii) நிதியிடல் உத்தரவாத மீளாய்வின் நிறைவு, பல்புடைப் பங்காளர்களின் நிதியிடல் பங்களிப்புக்களை உறுதிப்படுத்தல் மற்றும் படுகடன் மறுசீரமைப்புடன் போதியளவிலான முன்னேற்றத்தினை மதிப்பிடுதல் என்பவற்றினை அடிப்படையாகக்கொண்டு மீளாய்வின் நிறைவினைப் பரிசீலனை செய்யும்.

**கொழும்பு, இலங்கை – 2024 நவெம்பர் 23:** இலங்கைக்கான சிரேஷ்ட பணிக்குழுப் பிரதானி திரு. பீற்றர் புரூவர் தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் குழுவொன்று 2024 நவெம்பர் 17 தொடக்கம் 23 வரை கொழும்பிற்கு விஜயம் செய்தது. கொழும்பில் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை மேற்கொண்டதன் பின்னர் திரு. பிரூவர் மற்றும் துணை பணிக்குழுப் பிரதானி செல்வி. கற்ஷியாரினா ஸ்விறிட்செங்கா ஆகியோர் பின்வரும் அறிக்கையினை வெளியிட்டனர்:

“4 ஆண்டுகளைக் கொண்ட [விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின்](#) கீழான மூன்றாவது மீளாய்வு குறித்து இலங்கை அதிகாரிகளுடன் அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதியக் குழு எட்டியுள்ளதென்பதனை அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். சி.எ.உ 2.3 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையொன்றிற்கான ஏற்பாடானது பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை மூலம் 2023 மாச்சு 20 அன்று ஒப்புதலளிக்கப்பட்டது.

“அலுவலர் மட்ட உடன்படிக்கையானது பன்னாட்டு நாணய நிதியத்தின் முகாமைத்துவத்தினதும் பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையினதும் ஒப்புதலுக்குட்பட்டதாகக் காணப்படுவதுடன் இது (i) நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2025 ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டமொன்றின் சமர்ப்பிப்பு உள்ளடங்கலாக முன்கூட்டிய நடவடிக்கைகளை அதிகாரிகள் நடைமுறைப்படுத்தல் மற்றும் (ii) மறுசீரமைப்பானது காலந்தவறாததொரு முறையிலும் நிகழ்ச்சித்திட்ட படுகடன் இலக்குகளுடன் இசைந்து செல்லும் விதத்திலும் நிறைவுசெய்யப்படுமென்ற நம்பிக்கையினை வழங்கும் பொருட்டு பல்புடைப் பங்காளர்களின் அர்ப்பணிக்கப்பட்ட நிதியிடல் பங்களிப்புக்களையும் படுகடன் மறுசீரமைப்புடன் போதியளவிலான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதென்பதனையும் உறுதிப்படுத்துவதனை நோக்காகக் கொண்ட நிதியிடல் உத்தரவாத மீளாய்வின் நிறைவு என்பவற்றில் தங்கியுள்ளது.

“நிறைவேற்றுச் சபை மீளாய்வை நிறைவுசெய்ததன் பின்னர் இலங்கை சி.எ.உ 254 மில்லியன் தொகைக்கான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 333 மில்லியன்) அணுகலினைக் கொண்டிருக்கும் என்பதுடன் இது ஏற்பாட்டின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சி.எ.உ 1,016 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1,333 மில்லியன்) கொண்டுவரும்.

“பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பேராவல்மிக்க மறுசீரமைப்பு நிகழ்ச்சிநிரலானது பாராட்டத்தக்க பெறுபேறுகளை விளைவிக்கின்றது. பொருளாதாரமானது 2024 யூனில் முடிவடைகின்ற நான்கு காலாண்டுகளில் சராசரியாக 4 சதவீதத்தினால் ஆண்டிற்காண்டு விரிவடைந்தது. உயர் கால இடைவெளியிலான குறிகாட்டிகள் சகல துறைகளிலும் தொடர்ச்சியானதொரு விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றன. சராசரி முதன்மை மற்றும் மையப் பணவீக்கம் என்பன மூன்றாம் காலாண்டுப் பகுதியில் 0.8 மற்றும் 3.8 சதவீதங்களில் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளுடன் 2024 ஒத்தோபர் இறுதியில் ஐ.அ.டொலர் 6.4 பில்லியனிற்கு அதிகரித்தன. கணிசமானளவிலான இறை மறுசீரமைப்புக்களைத் தொடர்ந்து அரச நிதி வலுவடைந்துள்ளது.

“சமூக செலவிடல் மீதான குறிகாட்டி இலக்குகள் நீங்கலாக, 2024 யூன் இறுதிக்கான அனைத்து அளவுசார் செயலாற்றப் பிரமாணங்கள் மற்றும் குறிகாட்டி இலக்குகள் மற்றும் 2024 செத்தெம்பர் இறுதிக்கான குறிகாட்டி இலக்குகள் நிறைவுசெய்யப்பட்டு, நிகழ்ச்சித்திட்ட செயலாற்றம் வலுவாகக் காணப்பட்டது. 2024 ஒத்தோபரிற்கு முன்னர் நிறைவேற்றப்படவேண்டிய அநேகமான கட்டமைப்புசார் அளவுகோல்களும் ஒன்றில் நிறைவுசெய்யப்பட்டிருந்தன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததென்பதுடன் சில அளவுகோல்கள் தேர்தல் சுற்றின் காரணமாகத் தாமதமடைந்துள்ளன.

“நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களிற்கான புதிய அரசாங்கத்தின் அர்ப்பணிப்பானது நம்பிக்கையினை மேம்படுத்தியுள்ளதுடன் கொள்கைத் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்துகின்றது. மறுசீரமைப்பு உத்வேகத்தினை நிலைபெறச்செய்தலானது நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கடின உழைப்பினால் வென்றெடுக்கப்பட்டவற்றினைப் பாதுகாப்பதற்கும் நீடித்துநிற்கக்கூடிய மீட்சி மற்றும் உறுதியான மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய வளர்ச்சி என்பவற்றினை நோக்கிய பாதையொன்றில் பொருளாதாரத்தினை இடம்பெறச்செய்வதற்கும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. நெருக்கடியானது இலங்கையின் ஒட்டுமொத்த குடித்தொகையினையும்

பாதிப்படையச்செய்துள்ளமையினால் பொருளாதார வளர்ச்சியிலிருந்தான நன்மைகள் காத்திரமான முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதனை நிச்சயப்படுத்துவதானது முக்கியமானதாயமையும்.

"பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பேணுதல் மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கும்தன்மையினை மீட்டெடுத்தல் என்பன இலங்கையின் சுபீட்சத்தினைப் பாதுகாப்பதற்கு முக்கியமானவையாகக் காணப்படுவதுடன் இவை பொறுப்புமிக்க இறைக் கொள்கையினை விடாமுயற்சியுடன் தொடர்வதனைத் தேவைப்படுத்துகின்றன. தொடர்ச்சியான அரசிறைத் திரட்சி முயற்சிகள் மற்றும் செலவிடல் கட்டுப்பாடுகள் என்பன நிகழ்ச்சித்திட்ட பிரமாணங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் 2025 வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுகின்றன. அரசிறை நிர்வாக மறுசீரமைப்புக்கள் மற்றும் வரி இணங்குவிப்பினை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் என்பன நெருக்கடியிலிருந்து தோற்றம்பெற்ற சுமையானது வரி செலுத்துவோரின் இயலுமைக்கு ஏற்ப விகிதாசார முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதனை நிச்சயப்படுத்துவதற்குத் துணைபுரியும். புதிய வரி விலக்களிப்புக்களைத் தவிர்தலானது அரசிறைக் கசிவுகள் மற்றும் ஊழல் இடர்நேர்வுகள் என்பவற்றைக் குறைப்பதற்கும் சமூக செலவிடலிற்கு உள்ளடங்கலாக மிகவும் அவசியமான இறைத் தாங்கியிருப்புக்களைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கையின் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் துணைபுரியும். எரிபொருள் மற்றும் மின்சார விலையிடலில் செலவு மீட்சியினைப் பேணுதல் மற்றும் வழிவழியாக வந்த படுகடன்களைத் தீர்த்தல் என்பன அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளிலிருந்து தோன்றுகின்ற இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கு உதவும்.

"இக்கடினமான தருணத்தில் ஏழ்மையிலுள்ளவர்களையும் பாதிப்படையக்கூடியவர்களையும் பாதுகாக்க வேண்டிய முக்கியமானதொரு பொறுப்பு அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. சமூக செலவிடல் மீதான நிகழ்ச்சித்திட்டத்தின் குறைந்தபட்ச செலவிடல் இலக்கினைப் பூர்த்திசெய்வதற்கும் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களின் குறிப்பாக, அஸ்வெசும திட்டத்தின், இலக்கிடல், போதுமாந்தன்மை மற்றும் உள்ளடக்கம் என்பவற்றினை மேம்படுத்துவதற்குமான முயற்சிகளை இரட்டிப்பாக்குவது முக்கியமானதொன்றாகத் திகழ்கின்றது.

"பணவீக்கமானது எதிர்பார்த்ததிலும் பார்க்க விரைவாக குறைவடைந்துள்ள வேளையில், நீடித்துநிலைத்திருக்கும் விலை உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்கும் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப்பதற்கும் தொடர்ச்சியான கண்காணித்தல் தேவைப்படுகின்றது. தற்போது நிகழ்கின்ற உலகளாவிய நிச்சயமற்றதன்மைக்கெதிராக வலுவான ஒதுக்குத் திரட்சியினூடாக வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களைத் தொடர்ந்து மீள்கட்டியெழுப்புவதானது தொடர்ந்தும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது.

"முறி உடமையாளர்களுடனான கோட்பாட்டு ரீதியான இலங்கையின் அண்மைய உடன்படிக்கையானது இலங்கையின் படுகடனை நிலைபேறானதன்மையினை நோக்கிய பாதையொன்றில் இடம்பெறச்செய்வதில் முக்கிய மைல்கல்லொன்றாகத் திகழ்கின்றது. வர்த்தகப் படுகடன் மறுசீரமைப்பினை நிறைவுசெய்தல், அலுவல்சார் கடன்கொடுநர் குழுவுடனான உடன்படிக்கைக்கு அமைவாக அலுவல்சார் கடன்கொடுநர்களுடன் இருபுடை உடன்படிக்கைகளை இறுதிப்படுத்தல் மற்றும் ஏனைய உடன்படிக்கைகளின் நியதிகளை நடைமுறைப்படுத்தல் என்பன முக்கியமான அடுத்த படிமுறைகளாகக் காணப்படுகின்றன.

"புதிய அரசாங்கத்தின் ஆணையானது ஆளுகை மறுசீரமைப்புக்கள் ஊழல் இடர்நேர்வுகளை நிவர்த்திசெய்து, பொருளாதார நம்பிக்கையினை மீள்கட்டியெழுப்பி, மிகவும் வலுமானதும் அனைவரையுமுள்ளடக்கியதுமான வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கும் புத்துணர்ச்சியளிக்கும்.

"பன்னாட்டு நாணய நிதியக் குழு மேன்மைதகு சனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுர குமார திஸாநாயக்க, கௌரவ தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பர்ணாந்து, நிதி மற்றும் திட்டமிடல் கௌரவ

பிரதி அமைச்சர் முனைவர் ஹர்ஷன சூரியப்பெரும, சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன, ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள், ஆகியோருடன் சந்திப்புக்களை நடாத்தியது. பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறை, சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் குழு சந்தித்தது.

‘‘உன்னதமான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.’’